## மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை
**O.S. No. 177 / 2022**

**பி.வா.சா.1 – முனிச்சாமி** **02.12.2025**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வாதிகள் தாவா சொத்து அவர்கள் தாத்தா சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கில் 2 தாவா சொத்துக்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். இந்த வழக்கில் நான் எதிர்கோருரிமை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எனது தாத்தா பெயரில் உள்ள எஸ்.எல்.ஆர் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்குரைஞருக்குத்தான் தெரியும். இந்த வழக்கில் எனது தாத்தா பெயரில் உள்ள உரிமை மூல ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது எதிர்வழக்குரையில் சர்வே எண் 242/6 வீரணன் அம்பலத்திற்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில் எந்த வகையில் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. யு.டி.ஆரில் மொத்த சொத்தும் 1 ஏக்கர் 8 செண்டும் பெரியாம்பிள்ளை என்பவர் பெயரில் தவறாக மாறியதாக எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. 1 ஏக்கர் 8 செண்டும் பெரியாம்பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பெரியாம்பிள்ளைக்கு வாதியின் தகப்பனார் கருப்பணன் சட்டப்படியான வாரிசு என்றால் சரிதான். பெரியாம்பிள்ளை இறந்த பின்பு அவரது வாரிசான கருப்பணன் தாவா

சொத்துக்களை சட்டப்படி அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. கருப்பணன் 1வது வாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து



19.11.2008 ல் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. மேற்படி தான செட்டில்மெண்ட் பற்றி எனக்கு நன்கு தெரிந்திருந்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 242/3 என்பது 242/3, 242/6, 242/7 என உட்பிரிவு செய்யப்பட்டதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்டது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டால் அந்த உட்பிரிவை நீக்கி மீண்டும் பழைய சர்வே எண்ணுக்கு கொண்டு செல்லும் வழக்கம் வருவாய் துறையில் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 02.04.2008 தேதியில் எனது அப்பாவும் எனது அம்மாவும் எனக்கு தாவா சொத்துக்களை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாக நான் எதிர்வழக்காடி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி 02.04.2008 ஆவணம் தான் வாதி தரப்பில் வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.11ல் சர்வே எண் 241/8ல் கண்ட 38 செண்டும் சர்வே எண் 242/6ல் கண்ட 37 செண்டும் என இரண்டு லக்க சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் மேற்படி ஆவணத்தில் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு லக்க சொத்துக்களுக்கும் தாவா சொத்துக்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனக்கு உரிமை இருப்பதாக எந்த ஆவணங்களும்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆவணத்தில் சர்வே எண் தவறாக குறிப்பிட்டுள்ளதாக நான் சொல்லியுள்ளதற்கு அதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நடவடிக்கை



எடுக்கவில்லை. தாவா சொத்துக்கள் 1ம் வாதிக்கு தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்டு அதில் ஒரு பகுதியைதான் 1ம் வாதி 2ம் வாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் வாதிகள் சொல்லி எனக்கு தெரியும். 2ம் வாதிக்கு எழுதி வைத்த சொத்து தான் இந்த வழக்கில் 2வது லக்க சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றும் அந்த சொத்திற்கு 2ம் வாதி பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் ஏற்பட்டு அவர் தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள அசல் வழக்கு எண் 86/2013 வழக்கு முழு விசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யப்படவில்லை வாதியின் வருகையின்மையால் மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இடைநிலை மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமையில்லை என்று தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. குற்றவியல் நடவடிக்கை சம்மந்தமாக நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1ம் வாதி பெயரில் தாவா சொத்துக்களை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட விபரம் எனக்கு 2013ல் தெரியவந்தது. 2013லிருந்து இன்று வரை அந்த தான செட்டில்மெண்ட்டை எதிர்த்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனது பெயரில் சொத்து உள்ளதால் நடவடிக்கை எடுக்கவில்லை. 1ம் வாதி பெயரில் உள்ள

ஆவணத்தை நான் ஏற்றுக்கொண்டதால் நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1 ஏக்கர் 8 செண்டும் பெரியாம்பிள்ளைக்கு

பாத்தியப்பட்டு அவரது வாரிசுகளான வாதிகள் அடைந்து தனித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் தாவா சொத்துக்களில் எனக்கு எந்தவிதமான உரிமையும் அனுபவமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 ஆவணத்தில் தாவா சொத்து எனது தந்தைக்கு பாகப்பிரிவினை அடிப்படையிலோ பூர்வீக பாத்தியப்பட்டதாகவோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. மேற்படி வா.சா.ஆ.11 ஆவணத்தில் நாச்சியம்பலம் என்பவரிடமிருந்து எனது தாயார் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நாச்சியம்பலத்திடமிருந்து எனது தாயார் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நாச்சியம்பலத்திடிருந்து எனது தாயார் கிரையம் பெற்றதை எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது அம்மா கிரையம் வாங்கிய சொத்துக்கள் வேறு என்றும் தாவா சொத்துக்கள் வேறு என்றும் வா.சா.ஆ.11 ஆவணத்தில் சர்வே நம்பர் தவறாக குறிப்பிட்டுள்ளதாக கூறி தாவா சொத்துக்களில் தவறாக உரிமை கொண்டாடி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பெரியாம்பிள்ளைக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் அந்த சொத்துக்களில் அவரது சகோதரர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பெரியாம்பிள்ளைக்கு நான் சட்டப்படியான வாரிசு இல்லை என்றால் சரிதான். பெரியாம்பிள்ளையின் வாரிசுகளுக்கு மட்டும் தான் தாவா சொத்துக்களில் உரிமை உள்ளது என்றும் அவரது வ வாரிசுகள் அல்லாத நபர்களுக்கு தாவா சொத்துக்களில் எந்தவித

உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.11 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த ஆவணம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. மோசடியான ஆவணத்தின் அடிப்படையில் நான் உரிமை கொண்டாடுவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு தற்பொழுது வரை வருவாய் துறை ஆவணங்கள் வாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை